நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை
மேட்டூர் நகராட்சி

மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனிஅலுவலர் அவர்களால் 30.07.2020ம் தேதி முற்பகல் 11.00 மணிக்குநடைபெறஉள்ளது.

மன்றப் பொருள்

1. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.K.Dis No.31096/P3/2017, நாள்.10.01.2018ல் தனியார் மூலம் துப்புரவு பணி செய்ய மாவட்ட ஆட்சியரால் அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்தின்படி, மேற்காண் கடிதத்தில் தெரிவித்துள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு, மூன்று வருடத்திற்கு அமர்த்திக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டதற்கிணங்க, அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டு அவற்றின் குறைந்த விலை விகிதம் அளித்துள்ள M/s RELYON FACILITY SERVICE PVT.LTD, CHENNAI நிறுவனத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.122 நாள்.19.07.2019ல் அனுமதி பெறப்பட்டு இவ்வலுவலக செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்.1517/2019/எச்1, நாள்.30.07.2019ல் ஓராண்டிற்கு மட்டும் ஒப்பந்தம் வழங்கப்பட்டது. அதன் ஒப்பந்த காலம் 31.07.2020 உடன் முடிவடைவதால், M/s RELYON FACILITY SERVICE PVT.LTD CHENNAI நிறுவனம் தனது 09.07.2020ம் தேதிய கடிதத்தில், ஏற்கெனவே உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு பணிபுரிய சம்மதம் தெரிவித்து, மேலும் ஓராண்டிற்கு ஒப்பந்தத்தினை நீட்டிப்பு செய்து தரக்கோரியுள்ளனர். அரசாணை எண்.101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.04.1997ல் தெரிவிக்கப்பட்டுள்ள அளவுகோளின்படி 180 தூய்மை பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும், ஆனால் இந்நகராட்சிக்கு 165 தூய்மை பணியாளர் பணியிடங்கள் மட்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவற்றில் தற்போது 92 தூய்மை பணியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளதால், 73 தூய்மை பணியாளர்களைக்கொண்டு 30 வார்டுகளிலும் பொது சுகாதாரப்பணிகளை மேற்கொள்ள இயலாது என்பதாலும், தற்போது தீவிரமாக பரவி வரும் கொரானா தொற்று, டெங்கு காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி உள்ளதாலும், பொது சுகாதார நலன் கருதி தனியார் மூலம் 47 ஒப்பந்த பணியாளர்களைக்கொண்டு துப்புரவு பணி செய்து வர M/s RELYON FACILITY SERVICE PVT.LTD, Chennai நிறுவனத்திற்கு இவ்வலுவலக செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்.1517/2019/எச்1 நாள்.30.07.2019ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும், அதே விலை விகிதத்தின்படியும் மீண்டும் 01.08.2020 முதல் 31.12.2020 வரை கால நீட்டிப்பு வழங்கவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.7900000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்
2. இச்செலவினத் தொகையினை திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1517/2019/எச்1)

தீர்மான எண். 120 நாள் 30.07.2020

அனுமதிக்கப்பட்டது

2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.K.Dis.No.32976/J3/2018, நாள்.08.07.2019ல் தனியார் மூலம் துப்புரவு பணி செய்ய மாவட்ட ஆட்சியரால் அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்தின்படி, மேற்காண் கடிதத்தில் தெவித்துள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு,மூன்று வருடத்திற்கு அமர்த்திக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டதற்கிணங்க, அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டு அவற்றில் குறைந்த விலை விகிதம் அளித்துள்ள M/s RELYON FACILITY SERVICE PVT.LTD, CHENNAI நிறுவனத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.147 நாள்.05.08.2019ல் அனுமதி பெறப்பட்டு இவ்வலுவலக செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்.5916/2018/எச்1, நாள்.13.08.2019ல் ஓராண்டிற்கு மட்டும் ஒப்பந்தம் வழங்கப்பட்டது. அதன் ஒப்பந்த காலம்

13.08.2020 உடன் முடிவடைவதால், M/s RELYON FACILITY SERVICE PVT.LTD CHENNAI நிறுவனம் தனது 09.07.2020ம் தேதிய கடிதத்தில், ஏற்கெனவே உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு பணிபுரிய சம்மதம் தெரிவித்து, மேலும் ஓராண்டிற்கு ஒப்பந்தத்தினை நீட்டிப்பு செய்து தரக்கோரியுள்ளனர். அரசாணை எண்.101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.04.1997ல் தெரிவிக்கப்பட்டுள்ள அளவுகோளின்படி 180 தூய்மை பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும், ஆனால் இந்நகராட்சிக்கு 165 தூய்மை பணியாளர் பணியிடங்கள் மட்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவற்றில் தற்போது 92 தூய்மை பணியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளதால், 73 தூய்மை பணியாளர்களைக்கொண்டு 30 வார்டுகளிலும் பொது சுகாதாரப்பணிகளை மேற்கொள்ள இயலாது என்பதாலும், தற்போது தீவிரமாக பரவி வரும் கொரானா தொற்று, டெங்கு காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி உள்ளதாலும், பொது சுகாதார நலன் கருதி தனியார் மூலம் 52 ஒப்பந்த பணியாளர்களைக்கொண்டு துப்புரவு பணி செய்து வர M/s RELYON FACILITY SERVICE PVT.LTD, Chennai நிறுவனத்திற்கு இவ்வலுவலக செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்.5916/2018/எச்1 நாள்.13.08.2019ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும், அதே விலை விகிதத்தின்படியும் மீண்டும் 14.08.2020 முதல் ஓராண்டிற்கு கால நீட்டிப்பு வழங்கவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.8700000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்
2. இச்செலவினத் தொகையினை திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.5916/2018/எச்1)

**தீர்மான எண்.** 121 **நாள்** 30.07.2020

அனுமதிக்கப்பட்டது.

**3.** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் சேலம்-5 அவர்களின் 08.07.2020-ந் தேதி நடைபெற்ற காணொலி காட்சி மூலமாக வழங்கிய அறிவுரைகளின் படி, தற்பொழுது வடமேற்கு பருவமழையின் காரணமாக பூச்சிகளால் பரவக்கூடிய மலேரியா, டெங்கு, சிக்கன்குனியா போன்ற நோய்களை பரவாமல் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் தற்காலிக களப்பணி பணியாளர்களை நியமனம் செய்து பணியாற்றுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சியில் மொத்தம் உள்ள 30 வார்டுகளில் 12501 குடியிருப்புகள் உள்ளன. மொத்த மக்கள் தொகை 52813 ஆகும் எனவே பொது சுகாதாரம் டெங்கு நோய் தடுப்புக்கு வாரத்தில் ஆறு நாட்களுக்கான அட்டவணையின்படி நாள் 1-க்கு நபர் 1-க்கு 50/- வீடுகள் வீதம் 41 தற்காலிக தினக்கூலி களப்பணி பணியாளர்கள் தேவைப்படுகின்றது. எனவே நாள் 1-க்கு 2083/- குடியிருப்புகள் வீதம் 6 நாட்களுக்கு 12501 வீடுகளை கண்டறிந்து கொசுப்புழு ஒழிப்பு பணிகளை மேற்க்கொள்ளப்பட வேண்டியுள்ளது. எனவே, மேற்கானும் டெங்கு நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு உரிய தொகையான மாவட்ட ஆட்சித்தலைவர் சேலம் அவர்களின் 2019-2020 நிதியாண்டிற்கான மாவட்ட சந்தை விகிதாச்சாரப்படி தற்காலிக தினக்கூலி களப்பணி பணியாளர்களுக்கு நாள் 1-க்கு நபர் 1-க்கு ரூ 371/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே மாவட்ட ஆட்சித்தலைவர் சேலம் அவர்களின் சந்தை விகிதாச்சாரப்படி , நபர் 1-க்கு ரூ 371/- வீதம் 41 தற்காலிக தினக்கூலி நபர்களுக்கு 41x371 =15211 வீதமும், மாதம் ஒன்றுக்கு (31x15211 = 4,71,541/-) ரூ 4,71,541/- செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. எனவே டெங்கு நோய் தடுப்பு பணிக்காக மாதம் ஒன்று ரூ.4,71,541/-ஐ அரசிடமிருந்து மறு உத்திரவு வரும் வரை மாதந்தோறும் செலவினம் மேற்கொள்ளவும், இப்பணிக்கு தேவையான 41 தற்காலிக தினக்கூலி களப்பணி பணியாளர்களை மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களை நிபந்தனைக்குட்பட்டு ஈடுபடுத்தி பணிகளை மேற்கொள்ளவும் இச்செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியினிலோ அல்லது அரசிடமிருந்து

நோய் தடுப்பு குறித்து வரப்பெறப்படும் நிதியினிலோ செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. தற்பொது கொரோனா தொற்று அதிகமாக பரவி வரும் சூழ்நிலையில் பூச்சிகளால் பரவக்கூடிய நோய்களான மலேரியா, சிக்குன்குனியா மற்றும் டெங்கு போன்ற கொடிய நோய்களை கட்டுப்படுத்தவும், தடுக்கவும் முன்கூட்டியே முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு 12501 குடியிருப்புகளை 6 நாட்களுக்கான கால அட்டவணை தயாரித்து நாள் 1-க்கு 2083 வீடுகளுக்கு 41 பணியாளர்கள் வீதம் 6 நாட்களுக்கு நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. எனவே இவர்களுக்கான ஊதியத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் சேலம் அவர்களின் 2019-2020-ம் நிதியாண்டிற்கான மாவட்ட அரசிதழ் சந்தை விகிதாச்சாரப்படி நாள் 1-க்கு நபர் 1-க்கு ரூ.371/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே நாள் 1-க்கு 41 தற்காலிக தினக்கூலி களப்பணியாளர்களுக்கு ரூ 15211/- செலவினம் வழங்கப்பட வேண்டியுள்ளது. ஆகவே நாள் 1-க்கு 15211/- வீதம் 31 நாட்களுக்கு ரூ.4,71,541/- வழங்க வேண்டியுள்ளது. எனவே இந்நோய் தொற்றினால் பொது மக்களை எவரும் பாதிப்புக்கு உள்ளாகாமல் தடுக்கவும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி, தனி அலுவலரின் முன் அனுமதியின் பேரில் 10.07.2020-ந் தேதி முதல் டெங்கு நோய் தடுப்புப் பணிக்கு 41 தற்காலிக தினக்கூலி பணியாளர்களை மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களை நோய் தடுப்பு பணிக்கு ஈடுபடுத்தி நியமனம் செய்து கொள்ளவும், இப்பணியானது அரசிடமிருந்து மறு உத்திரவு வரும் வரை பணிக்கு ஈடுபடுத்திக் கொள்ளவும், அதற்கான செலவினத் தொகை ரூ.4,71,541/-ஐ, மாதந்தோறும் நகராட்சியின் பொது நிதியினிலோ அல்லது அரசிடமிருந்து நோய் தடுப்பு குறித்து வரப்படும் நிதியினிலோ செலவினம் மேற்கொள்ள மன்றம் பரிசீலித்து அனுமதி வழங்கலாம்.
(கட்டு எண்.1431/2020/H1)

**தீர்மான எண்.** 122 **நாள்** 30.07.2020

**அனுமதிக்கலாம்.**

4. மேற்பார்வை பொறியாளர் மேட்டூர் அனல் மின் நிலையம் 1 அவர்கள் 2005–06ஆம் ஆண்டில் சொத்துவரியாக காசோலை எண்.465590 நாள்.23.12.2005ல் ரூ.392742/– மற்றும் காசோலை எண்.465593 நாள்.24.12.2005ல் ரூ.531779/– ஆக மொத்தம் ரூ.924521/– செலுத்தப்பட்ட தொகை வைப்பு கணக்கிற்கு (வங்கி கணக்கு எண்.21048) வரவு எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகை காலங்கடந்த வைப்பு கணக்கிற்கு பதிவேடு பக்கம் எண்.33 மற்றும் 34ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. உதவி பொறியாளர் சிவில் கட்டிட பராமரிப்பு .2/உகோ.1 அவர்களின் கடிதம் எண்.உ.பொ/சிவில்/க.ப.உ/மேஅநிநி1/கோ.எண்.106/20 நாள்.11.06.2020ம் தேதிய கடிதத்தில் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகை ரூ.2417322+218572 ஆக மொத்தம் ரூ.2635894/–ல் ரூ.931814யை பிடித்தம் செய்து பின்பட்டி பேரூராட்சிக்கு செலுத்தியது போக மீதி தொகை ரூ.1704100/–யை வழங்கப்பட்டுள்ளது. 2005–06ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தொகை ரூ.924521/– பிஎன்பட்டி பேரூராட்சிக்கு செலுத்தப்படவேண்டிய தொகையாக உள்ளதாலும் இந்நகராட்சி வருவாய் நிதி 2012–2013 பத்தி எண்.74(ஆ) விலும் தணிக்கை எழுப்பப்பட்டுள்ளது.

எனவே காலங்கடந்த வைப்பு பதிவேட்டில் உள்ள சொத்துவரித்தொகை ரூ.392742+531779=ரூ.924521யை வைப்பு தொகை கணக்கிலிருந்து உரிய சொத்துவரி தலைப்பிற்கு மாற்றம் செய்துகொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. காலங்கடந்த வைப்பு தொகை கணக்கில் உள்ள தொகை ரூ.92451யை சொத்துவரி கணக்கிற்கு வரவு எடுத்துக்கொள்ளலாம்.

**(ந.க.எண்.7606/2003/அ1)**

**தீர்மான எண்.** 123 **நாள்** 30.07.2020

**அனுமதிக்கப்பட்டது.**

5. **மேட்டூர் நகராட்சியின் அலுவலக உபயோகத்திற்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண்.TN52W 4242ற்கு ஆயில் சர்வீஸ் மற்றும் பழுதுகளை சரிசெய்ய உத்தேச செலவினம் ரூ.65,000/-க்கு (ரூ.அறுபத்து ஐயாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**

<u>அலுவலக குறிப்பு</u>

1. **மன்றம் அனுமதிக்கலாம்**
2. **நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்.2206/2020/இ1)**

**தீர்மான எண்.** 124 **நாள்** 30.07.2020

**அனுமதிக்கப்பட்டது.**

**6.** சேலம் மாவட்ட ஆட்சியர் மற்றும் தலைவர் கொடி நாள் நிதிக்குழு சேலம் அவர்களின் செயல்முறை ஆணையின்படி முன்னாள் படைவீரர் நலனுக்காக ஆண்டு தோறும் கொடி நாள் நிதி வசூல் செய்ய குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் தொகையை வசூல் செய்யும் பொருட்டு இந்நகராட்சி கருவூலம் மூலம் விண்ணப்பதாரர்களிடமிருந்து வசூல் செய்து செய்துக் கொள்ள இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண். 97 நாள். 26.05.2020 அன்று கீழ்கண்ட பட்டியல் வரிசை எண்.1 முதல் 8 வரை அனுமதி அளித்துள்ளது.

மேற்படி நகர்மன்ற தீர்மானத்தில் விடுப்பட்டுள்ள இனங்களை கீழ்க்கண்ட பட்டியல் வரிசை எண்.9 முதல் 15 வரை இந்நகராட்சி கருவூலம் மூலம் விண்ணப்பதாரர்களிடமிருந்து வசூல் செய்துக்கொள்ளவும், 01.08.2020 முதல் நடைமுறை படுத்திகொள்ளவும் மேலும் அத்தொகையினை உதவி இயக்குனர், மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சேலம் அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | இனம் | கொடி நாள் தொகை |
|---|---|---|
| 1. | புதியதாக சொத்துவரி விண்ணப்பம் | ரூ.100/– |
| 2. | சொத்துவரி பெயர் மாற்றும் விண்ணப்பம் | ரூ.100/– |
| 3. | புதிய குடிநீர் இணைப்பு விண்ணப்பம் | ரூ.100/– |
| 4. | குடிநீர் இணைப்பு பெயர் மாற்றும் விண்ணப்பம் | ரூ.100/– |
| 5. | கட்டிட வரைபடம் அனுமதி விண்ணப்பம் | ரூ.100/– |
| 6. | ஒப்பந்ததாரர் உரிமம் புதுப்பித்தல் விண்ணப்பம் | ரூ.500/– |

| | | |
|---|---|---|
| 7. | தொழில் வரி விண்ணப்பம் | ரூ.100/– |
| 8. | அபாயகரமானதும் அருவருக்க தக்க இனம் | ரூ.50/– |
| 9. | ஒப்பந்ததாரர் பதிவு விண்ணப்பம் | ரூ.250/– |
| 10. | வணிக உரிமம் விண்ணப்பம் | ரூ.100/– |
| 11. | கட்டிட உரிமம் புதுப்பித்தல் விண்ணப்பம் | ரூ.250/– |
| 12. | நகரளவை வரைபட விண்ணப்பம் | ரூ.100/– |
| 13. | பிறப்பு சான்றிதழ் விண்ணப்பம் | ரூ.50/– |
| 14. | இறப்பு சான்றிதழ் விண்ணப்பம் | ரூ.50/– |
| 15. | சுகாதார சான்றிதழ் விண்ணப்பம் | ரூ.250/– |

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.317/2020/சி1)**

**தீர்மான எண். 125 நாள் 30.07.2020**

**அனுமதிக்கப்பட்டது.**

7. தற்போது நாடு முழுவதும் கொரோனா வைரஸ் (Covid 19) பரவி வருவதால் அதனை தடுக்கும் பொருட்டு, மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நகராட்சி சட்ட விதி எண்.15ன் கீழ் கிருமி நாசினி தெளிக்க உதவும் உபகரணங்கள், தடுப்புகள் மற்றும் தற்காலிக மின் பிளக்குகள் ஆகிய பணிகள் கீழ்க்கண்ட விவரப்படி குறிப்பிட்டுள்ள செலவினத்தில் மேற்கொண்டமைக்கு, மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | பணியின் விபரம் | தொகை |
|---|---|---|
| 1 | Supply & fixing of wash basin and water supply arrangement in municipal office, Busstand and other govt buildings | 18,676.00 |
| 2 | Supply and Delivery of power Sprayer machine(3 No's) Supply & Delivery of 500L & 2000L | 1,34,400.00 |
| 3 | HDPC Tank for Disinfection Sprayer(2000L-500L-1) | 41,345.00 |
| 4 | Supply – Delivery & Commissioning of 600 Litre capacity Blast Sprayer | 4,72,000.00 |
| 5 | Printing of Flex Banners | 11,600.00 |
| 6 | Supply & Delivery of ASPEE Mist Blower Machine, & N95 Mask & Hand sanitizer | 29,316.00 |

| | | |
|---|---|---|
| 7 | Supply, Delivery & Installation of 400W Lamp in Rental Basis at Government Boys Higher secondary School for Temporary Market | 1,68,000.00 |
| 8 | Supply & Delivery of Power Sprayer Machine, Aspce mist blower machine & Battery Sprayer Machine | 2,73,560.00 |
| 9 | Supply, Delivery & Erection of 2000L HDPC Tank 5No's 1000L HDPC Tank 1 No's for Spraying Disinfection liquid | 59,490.00 |
| 10 | Printing flex Bnners size (4X4)& (6X4) for creating awareness regarding Covid 19 | 31,200.00 |
| 11 | Repair works, and providing water supply and wash basin arrabgement in papammal kalyanamandapam | 29,758.00 |
| 12 | Supply Delivery & Installation of 300L Capacity Freezer for Amma Unavagam | 29,900.00 |
| 13 | Providing Barry Guard Arrangement at Salem Camp & Thangamapuripattinam Area | 3,55,387.00 |
| 14 | Providing Barry guard arrangement at RE Quarters Area | 1,74,691.00 |
| 15 | Supply, Delivery & Installation of Temporary Light Arrangement in Government Higher Sec.School for Temporary Market | 2,18,400.00 |
| 16 | Supply, Delivery & Installation of 5 Litre Capacity Automatic Sanitizer Machine & 5 Litre Sanitizer | 64,640.00 |
| 17 | Supply Delivery & Installation of Tempory light arrangement in podhu Jana Seva sangam School for temporary Market | 34,720.00 |
| 18 | Providing Barry Guard Arrangement at coolie Line | 23088.00 |

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1448/2020/இ1)**

**தீர்மான எண். 126 நாள் 30.07.2020**

**அனுமதிக்கப்பட்டது.**

**8**. இந்நகராட்சியில் ANNUAL MAINTAANANCE FOR R.O PLANT பணிக்கு ரூ.1.60 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 08.07.2020ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | K.GOVINDAN<br>Poosaripatti<br>Omalur(TK)<br>Salem (DT) | 0.20%<br>குறைவு |
| 2 | M.Ramasamy<br>8/140, Periya vanavasi (Po)<br>Mettur, Salem. | 0.40%<br>அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.20% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள K.GOVINDAN Poosaripatti, Omalur ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.499/2020/இ1)**

**தீர்மான எண். 127 நாள் 30.07.2020**

**அனுமதிக்கப்பட்டது.**

**9.** இந்நகராட்சியில் 2020-2021 ஆம் ஆண்டிற்கான அலுவலக கணினிகள் மற்றும் பிரிண்டர்களுக்கு ஆண்டு பராமரிப்பு செய்தல் பணிக்கு ரூ.1.30 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 08.07.2020ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | SPYDER TECHNOLOGY<br>H.O.153 PMC PLAZA<br>SURAMANGALAM MAIN ROAD<br>THIRUVAGOUNDANOOR<br>SALEM | 0.20%<br>குறைவு |
| 2 | VENUS TECH<br>362/8 OPP DEVI THEATRE<br>KALARAMPATTI MAIN ROAD<br>SALEM | 0.30%<br>அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.20% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள SPYDER TECHNOLOGY SALEM ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.513/2020/இ1)**

**தீர்மான எண். 128 நாள் 30.07.2020**

**அனுமதிக்கப்பட்டது.**

**10.** இந்நகராட்சியில் 2020-2021 ஆம் ஆண்டிற்கான அலுவலக பிரிண்டர்களுக்கு டோனர் சப்ளை செய்தல் பணிக்கு ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 17.07.2020ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | SPYDER TECHNOLOGY<br>H.O.153 PMC PLAZA<br>SURAMANGALAM MAIN ROAD<br>SALEM | 0.20%<br>குறைவு |
| 2 | VENUS TECH<br>362/8 OPP DEVI THEATRE<br>SALEM | 0.30%<br>அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.20% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள SPYDER TECHNOLOGY SALEM ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.1497/2020/இ1)**

**தீர்மான எண். 129 நாள் 30.07.2020**

**அனுமதிக்கப்பட்டது.**

**11.** இந்நகராட்சியில் வாகன எண் TN 27 W 7815 வாகனத்தின் பழுது பணிகள் மேற்கொள்ளபட்டு தகுதி சான்று பெற்று தருதல் பணிக்கு ரூ.98,000/- மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 17.07.2020ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | M/S Lakshmi Auto Diesel Works,<br>Work Shop Corner, | 0.30%<br>குறைவு |

| | | |
|---|---|---|
| | Mettur Dam. | |
| 2 | JUK Auto Diesel Work,<br>JUK Complex,<br>Kondalampatti Main Road,<br>Salem. | 0.50%<br>அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.30% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள M/S Lakshmi Auto Diesel Works, Mettur ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.1759/2020/இ1)**

**தீர்மான எண். 130 நாள் 30.07.2020**

**அனுமதிக்கப்பட்டது.**

**12.** அரசாணை (MS) எண்: 166 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை நாள் 23.11.2016-ந் தேதிய கடிதத்தின்படி, அரசு நகராட்சி தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் உள்ள கழிவறை சுத்தம் செய்யும் பணி, பள்ளி வளாகம் முழுவதும் சுத்தம் செய்தல் ஆகிய பணிகளை மேற்க்கொள்ளவும், அதற்காக அந்தந்த மாவட்ட ஆட்சியர் அவர்களால் வருடந்தோறும் நிர்ணயிக்கும் மாவட்ட சந்தை விகிதசாரப்படி, தனியார் துறை ஒப்பந்த அடிப்படையில், பணியாளர்களை பணியில் அமர்த்தி கொள்ளவும், அதற்கான செலவு தொகை மற்றும் மேற்கண்ட அனைத்து துாய்மைபணிகள் மேற்க்கொள்ள தேவையான தளவாட சாமான்கள், கிருமிநாசினி மருந்துகள் மற்றும் பவுடர்கள் வாங்கி வழங்கவும், அதற்காக ஆகும் செலவின தொகையினை அந்தந்த நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் வசூலிக்கும் கல்வி வரியினை (Educatuion cess)-ன் மூலம் மேற்க்கொள்ளவும், அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் அறிவுரைகளின்படி, மேட்டூர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள 7 எண்ணிக்கை அரசு/நகராட்சி பள்ளிகளில், பள்ளியின் அனைத்து அறைகளும், கழிப்பறைகள், சிறுநீர்பறைகள் மற்றும் அனைத்து பள்ளியின் சுற்றுப்புற வளாக பகுதிகள் முழுவதும் (House Keeping Activites of the School) செய்யவும் 12 பணியாளர்களை ஈடுபடுத்தி கொள்ளவும், அதற்காக நபர் 1-க்கு நாள் 1-க்கு ரூ.457/- வீதம், தற்பொழுது திரு.கே.கோவிந்தன் ஒப்பந்ததாரர் ஓமலுார், என்பவரது இவ்வலுவலக உத்தரவு ந.க.எண். 2248/2019/எச்1, நாள்.06.08.2019 முதல் ஒரு ஆண்டிற்கு பணிகள் மேற்கொள்ள உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட பணிக்கான ஒப்பந்தகாலம் 05.08.2020-ந் தேதியுடன் முடிவடைகின்றது. தற்பொழுது பணிகளை மேற்கொண்டு வர ஒப்பந்ததாரரான திரு. கே.கோவிந்தன் என்பவர் தனது 24.07.2020- ந் தேதிய கடிதத்தில் தனக்கு 06.08.2019 –ந் தேதியில் வழங்கிய உத்தரவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் கூடிய உத்தரவின்படி, நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 7 பள்ளிகளில் அனைத்து துாய்மை சார்ந்த பணிகளை நாள் 1-க்கு 12 நபர்களை பணிக்கு ஈடுபடுத்தி துாய்மை பணிகள் மேற்கொண்டதில் எந்த ஒரு புகார்களுக்கும் இடமின்றி பணிகளை நல்ல முறையில் செயல்படுத்தி வருகின்றேன் எனவும் எனக்கு மேலும் 06.08.2020 முதல் 05.08.2021 வரையிலான ஒரு வருட காலத்திற்கு, 2019-2020 நிதியாண்டில் வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகைக்கு பணிகளை மேற்கொள்கிறேன் எனவும், ஒரு ஆண்டு காலத்திற்கு பணி நீடிப்பு செய்து தருமாறு கேட்டுள்ளார். எனவே தற்பொழுது 2019-2020 நிதியாண்டிற்கு சேலம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் சந்தை நிலவரப்படி, கீழ்கண்டுள்ளவாறு ஒரு நபருக்கு, ஊதியம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| | |
|---|---|
| நாள் 1-க்கு நபர் 1-க்கு ஊதியம் | ரூ. 371.00 |
| PF 13 % | ரூ. 48.23 |
| ESI 4.75 % | ரூ. 18.00 |
| Insurance | ரூ. 4.00 |
| Uniform | ரூ. 6.15 |

| | |
|---|---|
| P.H.Materials | ரூ. 11.00<br>----------<br>ரூ. 458.00 |
| Administrative charges 5% | ரூ. 23.00<br>------------------ |
| Total Rs. | 481.38<br>------------------ |

நாள் 1-க்கு நபர் 1-க்கு ரூ.481.38 வீதம்
தினசரி 12 பணியாளர்களுக்கு 481.38x12 ரூ. 5776.56

நாள் 1–க்கு 12 பணியாளர்களுக்கு ரூ.5776.56 வீதம் 365 நாட்களுக்கு 5776.56x365=21,08,444.40 } ரூ. 21,08,444.40

தற்பொழுது ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டு வரும் தொகை நபர் 1-க்கு 457/– வீதம் 12 நபர்களுக்கு ஒரு நாள் ஊதியம் ரூ.5484/- } ரூ. 5484.00

நாள் 1–க்கு 12 நபர்களுக்கு ரூ.5484/– வீதம் (5484x365=20,01,660) } ரூ. 20,01,660.00

புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரும் பட்சத்தில் ஒரு ஆண்டுக்கு ஆகும் செலவினம் } ரூ. 21,08,444.00

பழைய ஒப்பந்ததாருக்கே 2019-2020 ஆண்டு வழங்கப்பட்ட, உத்திரவின்படி அதே ஊதியத்தில் செலவினம் மேற்கொண்டால் ஒரு ஆண்டுக்கான செலவினம் } ரூ. 20,01,660.00

வித்தியாசம் ஒரு ஆண்டுக்கு = ரூ. 1,06,784/-

எனவே சென்ற 2019-2020-ம் நிதியாண்டிற்கு வழங்கப்பட்ட தொகைக்கும், 2020-2021 -ம் நிதியாண்டிற்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரும் பொழுது ஆகும் செலவினத்தை ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்ட வகையில் ஒரு வருடத்திற்கு கூடுதலாக ரூ.1,06,784/-நகராட்சிக்கு இழப்பீடு ஆகும். எனவே 2019-2020 -ம் ஆண்டு பணிகளை மேற்க்கொள்ளப்பட்டு வரும் ஒப்பந்ததாரர் திரு.கே.கோவிந்தன் அவர்களின் கடிதத்தில் எனக்கு 2019-2020-ம் ஆண்டு வழங்கப்பட்ட ஒப்பந்த புள்ளி தொகைக்கும் மற்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு பணிகளை மேற்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளதின் பேரில் திரு.K.கோவிந்தன் , பூசாரிபட்டி, ஓமலூர் அவர்களுக்கு 06.08.2020 முதல் மேலும் ஓராண்டிற்கு ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.20.00 இலட்சத்திற்கும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இதற்காகும் செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**(கட்டு எண்.2248/2019/H1)**

**தீர்மான எண்.** 131 **நாள்** 30.07.2020

**அனுமதிக்கப்பட்டது.**

13. இந்நகராட்சிக்குச் சொந்தமான மேட்டூர் கழிவுநீர்ப் பண்ணையில் உள்ள 68 மாமரங்கள் மற்றும் நாவல் மரங்களின் பலன்களை மட்டும் அனுபவிக்கும் உரிமத்தை 2018–2019 முதல் 2020–2021 வரையிலான

ஆண்டு முடிய திருமதி.ராதா க/பெ.சின்னதம்பி, மேட்டூர் என்பவருக்கு வழங்கப்பட்டது. மேற்படி உரிமதாரர் 2018–2019 ஆண்டின் உரிமத்தொகை முழுவதையும் செலுத்தி விட்டார். 2019–2020 ஆம் நிதியாண்டிற்கு உரிமத்தொகை மற்றும் வரித்தொகைகளை செலுத்த அறிவிப்புகள் அனுப்பப்பட்டும் உரிமத் தொகை மற்றும் வரித்தொகையை செலுத்தாததால் 2019–2020 ஆம் ஆண்டுக்கு செலுத்த வேண்டிய உரிமத்தொகை மற்றும் வரித்தொகை மொத்தம் ரூ.48,332/– ல், மேற்படி உரிமதாரரின் வைப்புத் தொகை ரூ.25000/– சரி செய்து கொண்டு மீதமுள்ள நிலுவைத் தொகை ரூ.23332/– செலுத்திடவும், தவறும் பட்சத்தில் உரிமம் ரத்து செய்யப்பட்டு, மறு ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் கடந்த 15.06.2020ல் அறிவிப்பு அனுப்பப்பட்டது. ஆனால் இது நாள் வரை உரிமதாரர் நிலுவைத் தொகையை செலுத்தவில்லை. எனவே மேற்படி உரிமதாரருக்கு வழங்கிய உரிமத்தை ரத்து செய்து மறு ஏலம் விடவும், உரிமதாரரின் மீது நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளவும் இந்நகராட்சியின் வருவாய் ஆய்வாளர் குறிப்பு வழங்கியுள்ளார்.

எனவே மேற்படி உரிம இனத்தை மறு ஏலம் விடவும், நிலுவைத் தொகைகளை உரிம விதிகளின் படி உரிமதாரர் உரிமத்தொகைகளை செலுத்தாததால், உரிமதாரருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடர நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1) உரிம இனத்தை மறு ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

2) உரிமதாரர் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடர ஆகும் செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்.3928/2017/அ2)**

**தீர்மான எண்.** 132 **நாள்** 30.07.2020

**அனுமதிக்கப்பட்டது.**

**14.** மேட்டூர் நகராட்சிக்கு சொந்தமான இத்துடன் இணைக்கப்பட்ட கீழ்க்காணும் கடைகளின் உரிமக் காலம் 31.03.2019 உடன் 9 ஆண்டுகள் முடிவடைந்ததால், அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.30.07.2007 ன்படி தற்போதைய சந்தை நிலவரத்திற்கு ஏற்ப குத்தகை தொகை மறு மதிப்பீடு செய்து இந்நகராட்சி அலுவலர் குழுவின் கள ஆய்வு அறிக்கையின்படி பொதுப்பணித்துறை மதிப்பீடு மற்றும் சந்தை மதிப்பீடு கணக்கிடப்பட்டு, சேலம் மண்டல நகராட்சிகளின் கண்காணிப்பு குழுவின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது. தற்போது கண்காணிப்புக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு சந்தை நிலவரத்திற்கு ஏற்ப கீழ்க்கண்டுள்ள விவரப்படி திருத்திய வாடகைத் தொகையை நிர்ணயம் செய்து வரப்பெற்றுள்ளது. அதன் விவரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | கடை எண். | அளவு | தற்போதுள்ள மாத வாடகை | கண்காணிப்புக் குழுவால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1 | 2 | 4 | 5 | 6 |
| 1. | MUDF – தினசரி அங்காடி கடை எண்.21 | “10 x 8” | 1393/- | 2518/- |
| 2. | IDSMT – புகைவண்டி நிலைய அருகில் கடை எண்.2 | “16 x 10” | 3770/- | 5203/- |
| 3. | பேருந்து நிலைய கடை எண்.5 மற்றும் 6க்கும் இடையில் உள்ள தகரப் பெட்டிக் கடை | “12 x 17” | 1852/- | 2695/- |

<u>அலுவலகக் குறிப்பு</u>

கண்காணிப்புக் குழுவால் மறு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகைத் தொகையை ஏற்றுக் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1744/2019/அ2)**

**தீர்மான எண்.** 133 **நாள்** 30.07.2020

**அனுமதிக்கப்பட்டது.**

**15.** இந்நகராட்சிக்குச் சொந்தமான சேலம் கேம்ப் ஞாயிறு தோறும் கூடும் வாரச் சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு **01.04.2016** முதல் **31.03.2019** முடிய உள்ள ஆண்டுகளுக்கு கடந்த **15.12.2015** அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், அதிகப்படியாக ஆர்.சுபாஷினி த/பெ.ராஜேந்திரன், மேட்டூர் என்பவர் ரூ.**2,07,000/–** க்கு ஏலம் கோரியிருந்தார். எனவே மேற்படி நபர் கோரியிருந்த ஏலத்தொகை **2015–2016** ஆம் ஆண்டு, அதாவது ஏலம் விடப்பட வேண்டிய ஆண்டிற்கு முந்தைய ஆண்டின் ஏலத்தொகைக்கும், மூன்றாண்டு உரிமத்தொகையின் சராசரி தொகையைக் காட்டிலும் அதிகமாக இருந்ததால், இவருக்கு மேற்படி ஞாயிறு தோறும் கூடும் வாரச்சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்தை ஒப்படைத்திட நகர்மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டது. மேற்படி நகர்மன்றத் தீர்மானம் எண்.**432**, நாள்.**29.12.15** ஆம் தேதிய தீர்மானத்தில் மேற்படி உரிமத்தை மறு ஏலம் கொண்டு வர தீர்மானம் நிறைவேற்றியது. அதிகப்படியான தொகைக்கு ஏலம் கோரியும் தனக்கு உரிமத்தை ஒப்படைக்காததால் இந்த உரிம இனத்தை தொடர்ந்து மறு ஏலம் கொண்டு வர தடை விதிக்கக் கோரி ஆர்.சுபாஷினி, மேட்டூர் அவர்கள் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர் – ல் வழக்கு தொடர்ந்து (வழக்கு எண்.

O.S.No.24/2016) தடை உத்தரவு பெற்றார். அதனைத் தொடர்ந்து ஏலம் நடத்த இயலாததால், இந்நகராட்சி பணியாளர்களைக் கொண்டு துறை மூலம் வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி வழக்கினை ஏற்று நடத்திட இந்நகராட்சி சட்ட ஆலோசகர் திரு.T.M.A.இனியன், வழக்கறிஞர் அவர்களை கோரப்பட்டு வழக்கு நடத்தி வந்தார். இந்நிலையில் வழக்கினை வாபஸ் பெறுவதாக மேற்படி நபர் ஆர்.சுபாஷினி, மேட்டூர் அவர்கள் மனு செய்ததற்கிணங்க வழக்கு முடிவுக்கு வரப்பெற்று, தடை விலக்கிக் கொள்ளப்பட்டு மறு ஏலம் நடத்தப்பட்டு, பின்னர் அதிகபட்சம் ஏலம் கோரிய வேறு உரிமதாரரிடம் உரிமம் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி இந்நகராட்சியின் சார்பாக வழக்கினை ஏற்று நடத்திய வகையில், வழக்கறிஞர் கட்டணமாக ரூ.2,500/– ஐ வழங்கிடக் கோரி திரு.T.M.A.இனியன், வழக்கறிஞர் அவர்கள் பட்டியல் சமர்ப்பித்துள்ளார்.

எனவே மேற்படி இந்நகராட்சியின் சார்பாக வழக்கு ஏற்று நடத்தியதற்காக வழக்கு கட்டணம் ரூ.2,500/– ஐ திரு.T.M.A.இனியன், வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

<u>(ந.க.எண்.5465/2015/அ3)</u>

**தீர்மான எண். 134 நாள் 30.07.2020**

**அனுமதிக்கப்பட்டது.**

**16.** இந்நகராட்சிக்குச் சொந்தமான வார்டு எண்.27, பொதுப்பணித்துறை பூங்கா அருகில் புதிதாக கட்டப்பட்டுள்ள குளியலறையுடன் கூடிய கட்டணக் கழிப்பிடங்களில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 23.03.2020ல் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில், ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை ( பிரதி மாத வாடகை ) |
|---|---|---|
| 1. | திரு.எம்.ஆனந்தன்,<br>10 A பெரியார் நகர்,<br>மேட்டூர் அணை | ரூ.1,40,619/- |
| 2. | திரு.வி.மாணிக்கம்,<br>33ஏ, மஜித் மசூதி பின்புறம்,<br>மேட்டூர் அணை. | ரூ.1,38,730/- |

<u>அலுவலக குறிப்பு</u>

மேற்படி வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.எம்.ஆனந்தன், மேட்டூர் அணை என்பவர் அதிகபட்சமாக ஒரு வருடத்திற்கு குத்தகையாக ரூ.1,40,619/- க்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொகையானது ஏற்கனவே

இருந்த வாடகையை விட ரூ.3,909/– கூடுதலாக உள்ளது. மேற்படி உரிமத்தை 01.04.2020 முதல் ஒப்படைக்க வேண்டி இருந்ததால், அவசரம் அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று மேற்படி ஒப்பந்தப்புள்ளியை உறுதி செய்தமைக்கும், உரிமத்தை ஒப்படைப்பு செய்தமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.833/2020/அ2 )**

**தீர்மான எண்.** 135 **நாள்** 30.07.2020

**அனுமதிக்கப்பட்டது.**

**17.** இந்நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையத்தில் தட்டத்தில் வைத்து முறுக்கு, இஞ்சிமுறப்பா, வெள்ளரிக்காய் போன்றவற்றை விற்கும் உரிமத்திற்கு பொது ஏலம் நடத்தப்பட்டு வந்து, அதிகபட்ச ஏலக் கேள்வி கோரியவருக்கு உரிமம் ஒப்படைக்கப்பட்டு வந்தது. மேலும் அதே போல் மேட்டூர் பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமத்தினையும் ஏலம் விடப்பட்டு உரிமதாரரால் நடத்தப்பட்டு வந்தது. இந்நிலையில் பேருந்து நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமதாரர், பேருந்து நிலையத்திற்குள் முறுக்கு, இஞ்சிமுறப்பா, வெள்ளரிக்காய் ஆகியவற்றை தட்டத்தில் மற்றும் தள்ளுவண்டிகளில் விற்பதால் பேருந்துகள் நிறுத்தம் செய்வதற்கு இடையூறாக உள்ளதாலும், இதனால் நுழைவுக் கட்டணம் வசூலிக்க பெரிதும் சிரமமாக உள்ளதாலும், பேருந்து நிலையத்திற்குள் மேற்படி தள்ளுவண்டி கடைகளை வைத்து வியாபாரம் செய்ய ஆட்சேபணை தெரிவித்திருந்தார். எனவே பேருந்து நிலையத்திற்குள் ஒரு ஓரமாக விற்பனை செய்ய உரிமதாரருக்கு அறிவுறுத்தப்பட்டது.

இந்நகராட்சியின் பேருந்து நிலைய கிரேடு “ C ” ஆகும். மேற்படி பேருந்து நிலையத்தின் உரிமத்தை ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கும் ஒரு முறை புதுப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு பேருந்து நிலைய உரிமத்தை 29.04.2017 முதல் 28.04.2020 முடிய புதுப்பிக்கப்பட வேண்டியிருந்தால் வட்டாரப் போக்குவரத்து அலுவலர், மேட்டூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு பேருந்து நிலையத்தின் உரிமத்தை புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி வட்டாரப் போக்குவரத்து அலுவலர், மேட்டூர் அவர்கள் மேட்டூர் பேருந்து நிலையத்தை ஆய்வு செய்த பிறகு தனது அலுவலக கடித ந.க.எண்.005776/2017/அ2, நாள்.25.04.2017 ல் பல குறைகளை சுட்டிக் காட்டி நிவர்த்தி செய்ய அறிவுறுத்தியிருந்தார். அதில் வரிசை எண்.2ல் குறிப்பிட்டுள்ள குறையில் Platform for boarding and getting down passengers பயன்பாட்டிற்கு உள்ளதை நடைபாதை கடைகள் மற்றும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதை அகற்ற வேண்டும் என குறிப்பிட்டிருந்தார். மேலும் பேருந்து நிலைய நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமதாரரின் மனுவின் மீதான மோட்டார் வாகன ஆய்வாளர், மேட்டூர் அவர்களின் கடித ந.க.எண்.153/அ2/2016, நாள்.13.04.16 ஆம் தேதிய கடிதத்தில் பேருந்து நிலையத்திற்குள் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றி உடன் அறிக்கை சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டதன் பேரில் இந்நகராட்சி பணியாளர்களைக் கொண்டு ஆக்கிரமிப்புகளை அகற்றியும் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்த பிறகும் உரிமம் புதுப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் பேருந்து நிலையத்திற்குள் பேருந்து வந்து செல்லும் இடத்தில் தட்டம் மற்றும் தள்ளுவண்டிகளில் வைத்திருந்த கடைகள் அகற்றப்பட்டதால், மேற்படி உரிமத்தை ஏலம் எடுத்த உரிமதாரர் தனக்கு உரிமத்தில் பெருத்த நஷ்டம் ஏற்பட்டதால் தொடர்ந்து உரிமத்தை நடத்த இயலாது என தெரிவித்து இந்நகராட்சி வசம் ஒப்படைத்து விட்டார்.

எனவே மேற்படி கடைகள் அகற்றப்பட்டதால் தொடர்ந்து 11.12.2017 ல் ஏலம் விடப்பட்டும் ஏலம் எடுக்க எவரும் முன்வரவில்லை. மேலும் இவ்வினத்தை நகராட்சியாலும் துறை மூலம் வசூலிக்க இயலாது.

மேலும் வட்டாரப் போக்குவரத்து அலுவலரின் ஒவ்வொரு முறை ஆய்வின் போதும் மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோருவதாலும், தொடர்ந்து கடைகள் வைக்க அனுமதித்து ஏலம் விட்டாலும் பேருந்து நிலைய உரிமத்தை புதுப்பிக்க இயலாமல் போகும் என்பதாலும், அவ்வாறு கடைகள் வைத்தாலும் பேருந்து நுழைவுக் கட்டணம் உரிமம் வசூலிக்கும் உரிமதாரர் ஆட்சேபணை செய்து வருவதாலும், மேற்படி மேட்டூர் பேருந்து நிலையத்திற்குள் தட்டம் மற்றும் தள்ளுவண்டிகளில் வைத்து முறுக்கு, இஞ்சிமுறப்பா, வெள்ளரிக்காய் போன்றவற்றை விற்கும் உரிமத்தை இந்நகராட்சி ஏல இனத்திலிருந்து 2020–2021 நிதியாண்டு முதல் ( 01.04.2020 முதல் ) நிரந்தரமாக நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் முடிவு செய்யலாம்.
2. தமிழ்நாடு அரசிதழ் எண்.230, நாள்:02.11.2015 பாகம்–III, பிரிவு 1 (a)–ல் வெளியிடப்பட்ட அரசாணை எண்.159, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.ஏ IV) துறை நாள்:02.11.2015ன் முலம் வெளியிடப்பட்ட "The Tamilnadu Street Vendors Livelihood And Regulation Of Street Vending Scheme And Rules 2015–ன் பிரிவு 3–ன் படி சாலையோர வியாபாரிகளை கணக்கெடுப்பு செய்து, சான்றிதழ் வழங்கி முறைப்படுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதால் மேற்படி குத்தகை இனத்தை 01.04.2020 முதல் நிரந்தரமாக நீக்கம் செய்யலாம்

**(ந.க.எண்.3928/2017/அ2 )**

**தீர்மான எண். 136 நாள் 30.07.2020**

**அனுமதிக்கப்பட்டது.**

**18.** மேட்டூர் நகராட்சியில் பணிபுரியும் பல்வேறு பிரிவுகளை சார்ந்த பணியாளர்கள் 2020-21ம் ஆண்டிற்கு அலுவலக பணி மற்றும் பயிற்சிக்கு சென்று வருவதால் ஏற்படும் பயணப்படி உத்தேச செலவு தொகை ரூ.5,00,000/-( ஐந்து லட்சம் மட்டும் )-யினை நகராட்சி நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. 2020-21ம் ஆண்டிற்கான பயணப்படி செலவின தொகையினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்கலாம்.

**(ந.க.எண்.4563/2020/பி1)**

**தீர்மான எண். 137 நாள் 30.07.2020**

**அனுமதிக்கப்பட்டது.**

ஆணையாளர் (ம) தனிஅலுவலர்,
மேட்டூர் நகராட்சி.